06.03.2026

O.S.No. 152/2021

DW1- நிறைகுளத்தான் – த/பெ. கொத்தாளம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.03.2026

குறுக்கு விசாரணை : (வாதிகள் தரப்பில்)

1. வழக்கு சொத்தின் சர்வே எண்.385/10ல் முழு சொத்தும் உள்ளது என்றால் சரிதான்.

2. மொத்த சொத்தின் விஸ்தீரணம் 6.1/2 ஏர்ஸ் என்றால் சரிதான்.

3. தற்போது கிணறு பாழடைந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான் 6 மாதத்திற்கு முன்பு தான் 1ம் வாதி மண் அடித்து கிணற்றை தூற்றுவிட்டார். இந்த விவரத்தை நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

4. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

5. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் வாதி கிணற்றில் மண் அடித்து தூற்றுவிட்டார் என்ற விவரம் காணப்படவில்லை என்றால் அதை நான் சரியாக கவனிக்கவில்லை.

6. வாதிகள் தாக்கல் செய்த வாதுரையில் கிணறானது பாழடைந்து தூர்ந்து போய் உள்ளது என்றும் தற்போது மூடப்பட்டு மனையாக உள்ளது என கூறியுள்ள நிலையில் அதை நான் மறுக்காததால் அது

ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல.

7. தபசில் சொத்துக்கள் அனைத்தும் காட்டுபாவா மரைக்காயர் என்பவரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

8. கடந்த 24.11.2000ம் தேதி காட்டுபாவா மரைக்காயரின் வாரிசுகள் அனைவரும் 1ம் தபசில் சொத்து மற்றும் வேறு சொத்துக்களைப் பொறுத்து பதிவு பாகம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. இந்த விவரத்தை வாதிகள் அவர்களது பிராதில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை நான் படித்து பார்க்கவில்லை.

9. வாதிகள் தாக்கல் செய்த வாதுரையை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

10. வாதிகள் கட்சியைப் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

11. வாதிகளின் கட்சி தெரியாததாலும் வாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தெரியாததாலும் என்னால் வழக்கு சம்மந்தப்பட்ட சங்கதிகளை மறுத்து சாட்சியம் சொல்ல இயலாது என்றால் சரிதான்.

12. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

13. நான் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் பெயர் தெரியாது ஆவணத்தை பார்த்தால் சொல்வேன்.

14. எனக்கு கிரையம் கொடுத்தவர்கள் பூர்விகமாக ஊத்துமலையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான் தற்போது புளியங்குடியில் உள்ளார்கள்.

15. காட்டுபாவா மரைக்காயர் வாரிசுகளுக்குள் 24.11.2000 த்தில் ஏற்பட்ட பாக பத்திரத்தில் 1 ம் தபசில் சொத்து யாருக்கு எவ்வளவு பங்கு என குறிப்பிட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த பாக பத்திரம் தான் சட்டப்படி செல்லும் என்றால் சரிதான்.

16. காட்டுபாவா மரைக்காயர் வாரிசுகளுக்குள் 24.11.2000 த்தில் ஏற்பட்ட பாக பத்திரத்தில் கண்ட சொத்திற்கு கூடுதல் விஸ்தீரணத்தை பொறுத்து நான் பிரிவின்றி கிரையம் பெற்றுள்ளதால் என் கிரையம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சரியான விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றுள்ளேன்.

17. நான் கிரையம் பெறுவதற்கு முன்பு 1 ம் தபசில் சொத்தைப் பொறுத்து வில்லங்கத்தை பார்வையிட்டேன் என்றால் சரிதான்.

18. கடந்த 04.12.2018 ம் நாளன்று 4 ம் வாதிக்கு ஹமீது மரைக்காயர் குமாரர் முகமது மீரான் என்பவர் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நாளதுவரை அந்த பத்திரத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

19. சர்வே எண்.385/10 ஆனது நான் கிரையம் பெறுவதற்கு முன்பே உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது பட்டா என் பெயரில் உள்ளது.

20. நான் சொத்தை கிரையம் பெறும்போது முன் ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் இல்லை.

21. நான் சர்வே எண்.385/10–ஐ மட்டுமே கிரையம் வாங்கினோ என்றால் இல்லை வேறு சர்வே எண்களிலும் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன்.

22. உட்பிரிவு ஆகுவதற்கு முன்பு சர்வே எண்.385/10ல் தெற்கோரம் கிழமேலாக ஒரு நடைபாதை உள்ளது என்றால் சரியல்ல நடைபாதை வேறு சர்வே எண்ணில் வரும்.

23. நான் கிரையம் வாங்கிய பத்திரம் 08.08.2019 என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

24. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.385/10 ஆனது 4வது அயிட்ட சொத்தாக கிரைய பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 4வது அயிட்ட சொத்தில் தெற்கு பக்க எல்கை மால் ஆக பொது நடைபாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது எனது வேறு சொத்திற்கு செல்வதற்காக காட்டப்பட்டுள்ள பொது நடைபாதை.

25. உட்பிரிவு செய்யப்படாத சர்வே எண்.385/10ல் அதன் உரிமையாளர்கள் பொதுப்பாதைக்கென இடம் விட்டு மீதி சொத்தை தான் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல.

26. பொது நடைபாதை தான் இந்த வழக்கின் 2ம் தபசில் சொத்தாக விவரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

27. சர்வே எண்.385/10ல் தெற்கோரம் கண்ட பொது நடைபாதையானது பாதைக்கு வடக்கே உள்ள அனைத்து உரிமையாளர்களுக்கு பாத்தியமானது என்றால் சரியல்ல.

28. 24.11.2000ம் தேதியிட்ட பாக அட்டவணையை அனுசரித்து கடந்த 03.03.2003ம் தேதியன்று 24.11.2000ம் தேதியிட்ட பாக அட்டவணையில் கண்ட 1,3,4 ஒரு தரப்பினராகவும், 3ம் வாதியின் தகப்பனாரான ஹமீது மரைக்காயர் ஒரு தரப்பினராக இருந்து வாய்மொழியாக பாகம் செய்து கொண்டார்கள் என்றும் அதில் தெற்கோரம் பாதை வகைக்காக கிழமேல் சென்ட் 2.27 பரப்பளவு உள்ள சொத்து ஒதுக்கப்பட்டது என்றும் அதற்கு வடபக்கம் மீதமுள்ள சொத்துக்களில் கீழோரம் தென்வடலாக சென்ட் 4.1/2 பரப்பளவு உள்ள இடத்தை ஹமீது மரைக்காயரின் 1/3 பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மீதமுள்ள சென்ட் 9.23 இடம் இதர பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

29. 03.03.2003 வாய்மொழி பாகம் நடைமுறைக்கு வந்து அவரவர்கள் சொத்தை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

30. வாய்மொழி பாகத்திற்கு முரணாக வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி தவறான பி.வா.சா.ஆ.2–ஐ உற்பத்தி செய்து அதற்கு ஏற்றார் போல் தவறான கட்சி செய்வதால் என் கட்சி நிராகரிக்கப்பட்டு வாதிகளின் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

31. வழக்குரையில் கண்ட 3ம் தபசில் 1வது அயிட்டமானது 1ம் வாதிக்கும், 3ம் தபசில் 2ம் அயிட்ட சொத்து 2ம் வாதிக்கும் தனித்தனியே உரிமைப்பட்டு அவர்கள் தனி அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

32. ஆவணத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றும் வாதிகளின் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)
தென்காசி